08.04.2025

OS No: 567/2019

வா.சா.2 திருமதி. பகவதி, க/பெ. மாதவன்

**<u>பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

எனக்கும், எனது கணவருக்கும் எப்போது திருமணம் நடைபெற்றது என்றால் 1990ம் வருடம் நடைபெற்றது. எங்களுக்கு எத்தனை குழந்தைகள் என்றால் ஒரு மகன் உள்ளார். எங்களுக்கு திருமணம் முடிந்து எத்தனை நாட்கள் கழித்து மகன் பிறந்தார் என்றால் 15 வருடங்கள் கழித்து பிறந்தார். எனது கணவர் தாவா வழக்கினை வழக்கறிஞர் மூலமாக ஆரம்பத்தில் ஆஜராகி நடத்திவந்தாரா என்றால் நடத்திவந்தார். எனது கணவர் 2020ம் வருடம் இறந்துவிட்டார் என்றால் 2022ம் வருடத்தில் இறந்தார். தாவா வழக்கிற்கு எனது கணவர் எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளாரா என்றால் தாக்கல் செய்துள்ளார். எனது கணவர் உயிருடன் இருந்தவரை தாவா வழக்கில் எந்தவித ஆட்சேபனையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தற்போது வரை எந்த சொத்தும் பாகப்பிரிவினை செய்யப்படவில்லை என்றால் சரிதான். 2ம் பிரதிவாதி பெருமாள் தான் தாவா சொத்துக்கள் முழுவதையும் எங்களது குடும்பம் சார்பாக பார்த்துவந்தாரா என்றால் நாங்கள் அனைவரும் கூட்டுக்குடும்பமாக இருந்தோம் 2ம் பிரதிவாதி தனியாக சொத்தைப் பார்த்துக்கொள்ளவில்லை, கூட்டாக சொத்தை பார்த்துக்கொண்டோம். தாவா சொத்தை தவிர எங்கள் குடும்பத்திற்கு வேறு பூர்வீக சொத்துக்கள் உள்ளதா என்றால் உள்ளது. தாவா சொத்து தவிர மற்ற சொத்துக்கள் அனைத்தும் தற்போது வரை பிரிவினை செய்யப்படாமல் உள்ளது என்றால் தாவா சொத்து மற்றும் அனைத்து சொத்துக்களும் பிரிவினை செய்யப்படாமல் ஒன்றாகத்தான் உள்ளது. தாவா சொத்தை தவிர பூர்வீக சொத்துக்கள் எதுவும் 2ம் பிரதிவாதி விற்பனை செய்யவில்லை என்றால் எந்த சொத்தையும் விற்பனை செய்யவில்லை. 17.04.2008ம் தேதி 2ம் பிரதிவாதி பெருமாள் தனக்கு பூர்வீக சொந்த பாத்தியமான 2ம் பிரதிவாதி பெயரில் 127 நம்பரில் பட்டா ஏற்பட்டு அவர் அனுபவத்தில் உள்ள சொத்தை கிரையம்

செய்து கொடுத்துள்ளார் என்றால் சரிதான், 3 பங்காளிகளும் மேற்படி சொத்தை 2ம் பிரதிவாதி விற்பனை செய்ய சம்மதித்தன் பேரில் கிரையம் செய்துள்ளார். மேற்படி கிரையம் குறித்து ஆட்சேபனை எதுவும் தாவா வழக்கில் நாங்கள் தெரிவித்துள்ளோமா என்றால் இல்லை. 2ம் பிரதிவாதி விற்பனை செய்த மேற்சொன்ன சொத்து 2ம் பிரதிவாதிக்கு பாகத்தில் கிடைத்த சொத்து என்றால் சரியல்ல. தாவா சொத்து 01.12.2000ம் வருடத்தில் ஜெகநாதனுக்கு கிரையம் கொடுக்கப்பட்ட சொத்து என்ற விபரம் சரியா என்றால் சரியா தவறா என்று எனக்கு தெரியாது. 01.12.2000ம் வருட பத்திரத்தை படித்துப்பார்த்து தான் எங்கள் தரப்பு ஆட்சேபனை செய்துள்ளோம் என்றால் சரிதான். எனது கணவருடன் நான் அவர் உயிருடன் இருந்த காலம் வரை சரியான உறவுமுறையில் வாழவில்லை என்றால் சரியல்ல. 2ம் பிரதிவாதி பெருமாளுக்கு சொத்துக்கள் பாகப்பிரிவினையில் கொடுக்கப்பட்ட விபரம் எனது கணவருக்கு தெரிந்ததால் தான் எனது கணவர் தாவா வழக்கில் ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கவில்லை என்றால் சரியல்ல, எனது கணவர் மலேசியாவில் இருந்ததால் அதன் விபரம் அவருக்குத் தெரியாது. தாவா சொத்து 2ம் பிரதிவாதிக்கு வாய்மொழி பாகத்தின் மூலம் கிடைத்த சொத்து என்பதால் தான் எனது கணவர் ஆட்சேபனை செய்யவில்லை என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணம் பதிந்து கொடுத்த விபரமும், அதன் பெயரிலான பட்டா ஏற்பட்ட விபரமும் எனது கணவருக்கு தெரியும் என்றால் சரியல்ல. எனது கணவர் என்னை திருமணம் செய்தபிறகு பெரும்பாலான காலங்கள் வெளிநாட்டில் இருந்துவந்தார் என்றால் எனக்கு திருமணம் முடிந்தபிறகு 12 ஆண்டுகாலம் வெளிநாட்டில் இருந்தார், அவ்வப்போது வந்து செல்வார். எனது கணவருடன் நான் வாழ்ந்த காலங்களில் அவருடன் சண்டைபோட்டுக்கொண்டு சுமுகமான உறவில் நான் இல்லை என்றால் சரியல்ல. 3ம் நபர் ஒருவருடைய தூண்டுதலின் பேரில் தாவா வழக்கை நான் நடத்துகிறேன் என்றால் சரியல்ல. தாவா சொத்திற்கான பட்டா வாதி பெயரில் மாற்றம் செய்யப்பட்ட விபரம் எனது கணவருக்கு

எப்போது தெரியவந்தது என்றால் 2019ம் வருடம் தெரியவந்தது, மேற்படி விபரம் தெரிந்தவுடன் வருவாய்த்துறை அலுவலகம் சென்று எனது கணவர் ஆட்சேபனை மனு எதுவும் செய்தாரா என்றால் SP அலுவலகத்தில் தான் புகார் கொடுத்தார். வருவாய் அலுவலகத்தில் அல்லது தாசில்தார் அலுவலகத்தில் அல்லது மாவட்ட ஆட்சியரிடம் பட்டா மாறுதல் குறித்து எனது கணவர் ஆட்சேபனை மனு எதுவும் கொடுத்தாரா என்றால் அது என் கணவருக்குத்தான் தெரியும். பி.வா.சா.ஆ.2 மனு ரசீதிற்கு உரிய புகார் மனு நகல் ஆவணமாக தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.2 புகாரானது எனது கணவரால் கொடுக்கப்படவில்லை என்றும், நானும் எனக்கு தெரிந்த இருவரும் சேர்ந்து எனது கணவர் பெயரில் கொடுத்த புகார் மனு ரசீது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.1 ஆவணமானது கிராமநிர்வாக அலுவலர் உண்மை நகல் எனக்குறிப்பிட்டு வழங்கியுள்ளார் மேறபடி பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை கிராமநிர்வாக அலுவலர் வழங்கிட அவருக்கு உரிமை இல்லை என்றால் சரியல்ல. தாவா சொத்து மற்றும் வேறு சொத்துக்கள் கொண்ட எங்களது குடும்ப பூர்வீக சொத்துக்களை எனது திருமணத்திற்கு முன்பே எனது கணவர் குடும்பத்தார் வாய்மொழி பாகம் பிரித்துக் கொண்டார்கள் என்ற விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் எனது திருமணத்திற்கு முன்பு நடந்தவிபரம் தெரியாது. 17.04.2008ம் தேதி பெருமாள், சுந்தரராஜன் என்பவருக்கு கிரையம் கொடுத்த சொத்து பெருமாளுக்கு பூர்வீக பாக பாத்தியத்தில் கிடைத்த சொத்து என்றும், அதில் பாத்தியமில்லாத வேறு 3 நபர்களுக்கு பாத்தியமுள்ளதாக சொல்வது தவறு என்றால் சரியல்ல. நான் குறிப்பிடும் 3 பங்காளிகள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும் மேற்படி 3 பங்காளிகளின் பெயரானது பெருமாள், சிந்தாமணி, மாயழகு ஆகிய மூவரைத்தான் நான் 3 பங்காளிகள் என சொல்கிறேன். மேற்படி நபர்கள் உயிருடன் உள்ளார்களா என்றால் உயிருடன் உள்ளார்கள், மேற்படி நபர்களை சாட்சியாக விசாரிக்க உள்ளேனா என்றால் சாட்சியாக விசாரிக்க உள்ளேன் (சாட்சி தற்போது அவர்களுடன் பேசிக்கொள்வதில்லை என்பதால் விசாரிக்கவில்லை என்று

சொல்கிறார்). 17.04.2008ம் தேதிய கிரையப்பத்திரத்தை எனது மச்சான் பெருமாள் மட்டுமே எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது மாமியார் பெயரிலான சொத்திற்குரிய பட்டா என்ன என்றால் 200க்கு மேல் பட்டா எண் வரும் எனக்கு ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.1ஐத் தவிர எங்களது பூர்வீக சொத்துக்களுக்கு சம்மந்தப்பட்ட ஆவணங்கள் வேறு ஏதேனும் தாக்கல் செய்துள்ளோமா என்றால் நீதிமன்றத்தில் கொடுக்கவில்லை. பி.வா.சா.ஆ.9 ஆவணம் தாவா வழக்கு நிலுவையில் இருந்த சமயத்தில் கொடுக்கப்பட்டதா என்றால் சரிதான். தாவா சொத்துக்களைச் சுற்றி வாதி ஜெகநாதனுக்கு வேறு சொத்துக்கள் உள்ளதா என்றால் தெரியாது. தாவா சொத்திற்கு நான்குமால் தெரியுமா என்றால் ஞாபகமில்லை. பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் குறிப்பிட்ட தாவா சொத்திற்கு அடுத்து கிழக்கே வாதி ஜெகநாதனுக்கு சொத்து உள்ளது என்றால் சரிதான். எனது தரப்பு ஸ்டேட்மெண்ட்டுக்கும் பி.வா.சா.ஆ.9 ஆவணத்துக்கும் விபரம் நான் தான் சொன்னேன் என்றால் சரிதான். தாவா சொத்தை சுற்றி சுமார் 40 ஏக்கர் நிலங்கள் வாதி ஜெகநாதனுக்கு உள்ளது என்றும், தாவா சொத்தின் தற்போதைய மதிப்பு அதிகம் என்பதால் எனது கணவர் இறப்பிற்கு பின்பு மூன்றாம் நபர் தூண்டுதலின்பேரில் தாவா வழக்கில் நான் ஆட்சேபனை செய்து, கட்சி செய்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனது கணவர் 2000ம் வருடத்திலிருந்து 2019 வரை வெளிநாட்டில் இருந்தாரா என்றால் ஆமாம். எனது நிருபணவாக்குமூல சங்கதி மற்றும் ஆட்சேபனை சங்கதி எதுவும் எனக்கு நேரடியாக தெரியாது என்றும் எனக்கு பின்னால் இருந்து என்னை இயக்குபவர் மூலமாக வாதியிடமிருந்து பணம் பறிக்கவேண்டும் என்பதற்காக தாவா வழக்கை நான் நடத்திவருகிறேன் என்றால் சரியல்ல. வாதியினுடைய கிரையப்பத்திரம் சட்டப்படி செல்லும் என்றும், அதனடிப்படையில் பெறப்பட்ட பட்டா ஆவணமும் சட்டப்படி செல்லும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை** இல்லை.

R Pandy
Digitally signed by R Pandy
Date: 2025.04.08 18:18:52 +0530